1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: அடுத்து வினா எண். 692......(குறுக்கீடு). எல்லோருக்கும் அனுமதி கொடுப்பதற்கு எனக்கு ஆட்சேபணை இல்லை. மூலக் கேள்வி போட்டவர் இரண்டு கேள்விகள் கேட்டார். ஏற்கனவே 4 கேள்விகளுக்கு 44 நிமிஷங்கள் ஆகியிருக்கின்றன. உறுப்பினர்கள் இவ்வளவு ஆர்வம் கொண்டிருந்தால் அவர்களே இந்தக் கேள்வியை கேட்டிருக்க வேண்டும். யாரோ போட்ட கேள்விக்குள்ளே நுழைந்து கேள்வி கேட்பது முறையாகாது.

டாக்டர் மு. கருணாநிதி: துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் ஒரு உறுப்பினரை கேள்வி கேட்க அனுமதிப்பதும், அனுமதிக்காமல் இருப்பதும் தங்களுக்குள்ள உரிமை, அதிகாரம். அதிலே நான் குறுக்கிட விரும்பவில்லை. ஆனால் யாரோ போட்ட கேள்விக்கு உள்ளே நுழைந்து கேள்வி கேட்க இடம் இல்லை என்று குறிப்பிட்டீர்கள். இந்த அவையின் மரபு, எந்த ஒரு கேள்வியிலும் அமைச்சர் தருகிற பதிலை ஒட்டி மற்ற உறுப்பினர் கேள்வி கேட்பதற்கு உரிமை உண்டு.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: ஒரு உறுப்பினர் போட்ட கேள்வியில் இன்னொரு உறுப்பினர் துணைக் கேள்வி கேட்கும் வாய்ப்பு என்று மாற்றிக் கொள்ளலாம்.

சென்னை மத்திய சிறையை செங்குன்றத்திற்கு மாற்றுதல்.

*வினா எண். 692.—திரு. து. புருஷோத்தமன், திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

சென்னை மத்திய சிறையை செங்குன்றத்திற்கு மாற்றும் யோசனை எந்த நிலையில் உள்ளது?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: செங்குன்றத்திற்கு அருகாமையில் உள்ள புழல் கிராமத்தில் சிறைத் துறைக்குச் சொந்தமான 139.50 ஏக்கர் நிலத்தில் புதிய மத்திய சிறையை நவீன முறையில் கட்டும் பணி, அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

திரு. இரா. தாமரைக்கனி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சிறு குற்றங்கள் புரிந்து, விசாரணைக்கு முன் ரிமாண்டில் வைக்கப்படுகின்ற குற்றவாளிகளை............

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : கேள்வி, சென்னை சிறையை செங்குன்றம் மாற்றுவது குறித்து, அதை ஒட்டிக் கேளுங்கள்.

திரு. இரா. தாமரைக்கனி : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, குற்றவாளிகளைக் கோர்ட்டுக்கு கொண்டு வரும் போது அவர்களுக்கு போதிய எஸ்கார்ட்டு போலீஸ் இல்லாத காரணத்தால் அவர்களை சிறையிலே வைத்திருக்கின்ற நிலைமை இருக்கின்றது. இதன் காரணமாக சிறையில் கூட்டம் அதிகமாக இருக்கின்றது. எனவே இத்தகைய சிறு குற்றங்களை விசாரிப்பதற்காக மீண்டும் நடமாடும் கோர்ட்டு கொண்டு வரப் படுமா ?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: துணைத் தலைவர் அவர்களே, ரிமாண்டு பிரிசனர்சைப் பொறுத்தவரையில் அவர்களை நீதிமன்றத்திற்கு விரைவில் கொண்டு வருவதற்கு இன்னும் அதிக மான காவலரைப் போடுவதென அரசு தீர்மானித்திருக்கிறது. நடமாடும் நீதிமன்றத்தைக் குறித்து அரசு மீண்டும் பரிசீலனை செய்து கொண்டிருக்கிறது.

திரு. இரா. தாமரைக்கனி : துணைத் தலைவர் அவர்களே, தமிழ் நாட்டில் ஒரு தடவை ஜெயிலுக்குப் போனவர்கள் மறு தடவை போகாமல் இருக்க மாட்டேன் என்று சொல்லுகிற அளவுக்கு குற்றங்கள் செய்கின்றவர்கள், மீண்டும் ஏதாவது குற்றங்கள் செய்து ஜெயிலுக்கு வருகிறார்கள். அவர்களை எல்லாம் சீர் திருத்துவதற்கு, கைதிகள் எப்படி திருந்த வேண்டும் என்பதைப் பற்றி எல்லாம் பல்லாண்டு வாழ்க என்னும் திரைப்படத்தில் காட்டப்படுகிறது. அந்தத் திரைப்படத்தை மீண்டும் மீண்டும் வாரம் ஒரு முறை போட்டால், அவர்கள் திருந்த வாய்ப்பு இருக்கும். சிறையிலும் நெரிசல் குறையும். எனவே அரசு இது குறித்து ஆவன செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவை துணைத் தலைவர் அவர்களே, ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் பல ஆய்வுகளை செய்து, புனர் வாழ்வு அளித்தல், சிறைக் கைதிகளைச் சீர்திருத்துதல் போன்ற பணிகளை எப்படி நடத்த வேண்டும் என்று அறிவுரை கூறி இருக்கிறது. பல்லாண்டு வாழ்க படத்திலே வரும் சில கொள்கைகளும் இந்த ஜெயில் ரிபார்ம்ஸ் கமிஷன் அறிக்கையிலே குறிப்பிடப்பட்டிருக்கின்றன.

டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, சிறைச்சாலையில் தூக்குதண்டனை பெற்ற கைதிகளும் இருப் பார்கள், அவர்களைப் பார்த்து பல்லாண்டு வாழ்க என்று சொன் னால், அது பலிக்குமா ?

1981 ஏப்ரல் 15]

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் தாமரைக் கனி கூறியது, மீண்டும் மீண்டும் சிறைக்கு வருபவர்களை திருத்தி வாழ வழி செய்வது என்ற அடிப்படையில் கூறி இருக்கிறார்கள்.

உரமூட்டைகள் விற்பனை.

*வினா எண். 693 : திரு வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு கூட்டுறவு சட்ட அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1980 ஆம் ஆண்டு தொடக்கத்தில் உரவிலையை மத்திய அரசால் உயர்த்திய சமயம் தமிழகத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களில் கையிருப்பிலிருந்த உர மூட்டைகளை முன் தேதியிட்டு பொறுப்பிலிருந்தவர்கள் விற்று விட்டது அரசுக்குத் தெரியுமா?

(ஆ) ஆம் எனில் அவர்கள் மீது அரசு எடுத்த நடவடிக்கை என்ன ?

(முற்பகல் 9-50).

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) சில இடங்களில் அவ்வாறு நடந்து இருக்கக்கூடும் என சந்தேகம் உள்ளது.

(ஆ) அவ்வாறு முன் தேதியிட்டு விற்பனை செய்யப்பட்டதாகச் சந்தேகப்படும் அளவு உரங்களுக்கு விலை வித்தியாசத் தொகையை சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களிடமிருந்து விசாரணைக்குப் பின் வசூலிக்க நடவடிக்கை எடுக்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட ஊழியர்கள், அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை விசாரணைக்குப் பின் எடுக்கப்பட உள்ளது.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பெரும்பான்மையான கூட்டுறவுச் சங்கங்களில் மைய அரசு உர விலையை ஏற்றி இருக்கிறது என்பதை அறிந்து ஒரே நாளில் இது போன்று ரசீது போட்டு உரங்களை விற்று இருக்கிறார்கள். ஆகவே, புகார் வந்துள்ள கூட்டுறவு சங்கங்களில் மட்டும் இந்த விசாரணை என்று இல்லாமல், எந்தெந்தக் கூட்டுறவுச் சங்கங்களில் சாதாரணமான நாட்களில் தினந்தோறும் 2-3 மூட்டை உரங்கள் கூட விற்காதோ, அங்கெல்லாம் கூட மத்திய அரசு உர விலையை ஏற்றியவுடன், முன் தேதியிட்டு, கையிருப்பில் இருந்த உர மூட்டைகளை விற்றதாக நிலைமைகள் இருக்கின்றனவோ, அப்படிப்பட்ட அனைத்துச் சங்கங்களின்மீதும் உரிய நடவடிக்கை எடுக்கஅரசு முன் வருமா ?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS